திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நடத்துகின்ற விடுதிகளை அரசே ஏற்று நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அத்தகைய திட்டம் அரசு பரிசீலனையில் இல்லை.

திரு ப. பொன்னுரங்கம்; தலைவர் அவர்களே, என் தொகுதியில் தாழ்த்தப்பட்ட மாணவியர்களுக்கான ஆஸ்டல் கட்டிடம் கட்டப்பட்டு, வெகு நாட்களாகத் திறக்கப்படாமல் இருக்கிறது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி தனியார் துறையைப் பற்றியது. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

3. அறிவிப்பு

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) எதிர்பாரா செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.